பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 24 வெள்ளிக்கிழமை 11.11.2022 கதிர் 258

## கடவுச்சீட்டு மோசடி: 5 இலங்கையர்கள் இந்தியாவில் கைது

(ந.லோகதயாளன்)

இந்தியக் கடவுச்சீட்டுக்களைப் பெற்றுக் கொள்வதற்காகப் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்த 5 இலங்கையர்கள் உட்பட 9 பேர் இந்தியாவின் பெங்களூரில் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பெங்களூர்

2

# ராஜீவ் காந்தி படுகொலை வழக்கு:

# நளினி, முருகன், சாந்தன் உள்ளிட்ட எஞ்சிய அறுவரும் இன்று விடுதலை







## இந்திய உச்ச நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு

**இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் 30 ஆண்டுகளுக்கு மேலாகச் சிறைத்தண்டனை பெற்று வந்த நளினி, முருகன், சாந்தன் உள்ளிட்ட 6 பேரை விடுதலை செய்ய இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

8

## நீதி மறுக்கப்படக்கூடாது!

### சபையில் சுமந்திரன் வலியுறுத்து



அபாயகரமான போதைப் பொருள் குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களுக்காகப் பிணை விண்ணப்பங்களை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஊடாக மாத்திரமே செய்வதாக இருக்கக் கூடாது. மாகாண மேல் நீதிமன்றத்தின் ஊடாகவும் அதற் கான வழிகள் இருக்க வேண்டும்

2

## தாயும், 7 மாதப் பெண் குழந்தையும் கிணற்றிலிருந்து சடலங்களாக மீட்பு

### மிருசுவிலில் சோகம்: தந்தை கைது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், தென்மராட்சி, மிருசுவில் பகுதியில் உள்ள வீடொன்றின் கிணற்றில் இருந்து தாயும், பெண் குழந்தை ஒன்றும் இன்று சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

மிருசுவில் தெற்கைச் சேர்ந்த பிரகாஷ் சந்திரமதி (வயது 40) மற்றும் அவரின் ஏழு மாதப் பெண் குழந்தையான

2



## முஸ்லிம் எம்.பிக்களுடன் உடன் பேச்சு நடத்துங்கள்

### அரசிடம் ரிஷாத் வேண்டுகோள்



முஸ்லிம் விவாகம் மற்றும் விவாகரத்துச் சட்டமூலம் தொடர்பில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் சந்திப்பொன்றை நடத்துவதற்கு அவசரமாக ஏற்பாடு செய்யுமாறும், அதன்மூலம் மக்கள் பிரதிநிதிகளின் கருத்துக்களை உள்வாங்கி மேற்கொண்டு நடவடிக்கை

8

## பதவியைத் தக்க வைக்க முப்படைகளுக்கும் காணியைத் தாரைவார்க்க முயலும் ஆளுநர்

### பிரதேச செயலர்களுடன் 15ஆம் திகதி கூட்டம்



வடக்கு மாகாண ஆளுநர் உட்பட்ட இலங்கை முழுவதிலும் ஆளுநர்கள் மாற்றம் செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், வடக்கு மாகாணத்தில் முப்படையினரும் காணி சுவீகரிப்பில் எதிர்கொள்ளும் தடைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் எதிர்வரும்

8

## ஜனாதிபதிக்கு செல்வம் எம்.பி. நன்றி தெரிவிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அண்மையில் பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்ட 8 பேரில் சட்டச் சிக்கலால் தடுத்து வைக்கப்பட்டிருந்த

8

## டயனாவுக்கு வெளிநாட்டு பயணத் தடை



சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்குக் கொழும்பு பிரதான நீதிவான் வெளிநாட்டுப் பயணத்தடை விதித்துள்ளார்.

எதிர்வரும் 17 ஆம் திகதி வரை இராஜாங்க அமைச்சருக்கு வெளிநாட்டுப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இரட்டைப் பிரஜாவுரிமை குறித்து இராஜாங்க

2

## இனப்பிரச்சினைக்குச் சமஷ்டியே தீர்வு

### நாடாளுமன்றில் கூட்டமைப்பு இடித்துரைப்பு




அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமஷ்டியே இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நீதித் துறை தொடர்பான திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாக நீதி அமைச்சர் பொது வெளியில் கூறுகின்றார்.

2

## மாணவியைத் தாக்கிய வகுப்பாசிரியர் கைது!

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகி வரும் மாணவி ஒருவரைப் பாடசாலையில் கொடூரமாகத் தாக்கினார் என்று கூறப்படும் ஆசிரியர் ஒருவரை ஹுங்கம பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சிறுமியின் தாயார் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபரான ஆசிரியர் நேற்று கைது செய்யப்பட்டார் என்று ஹுங்கம பொலிஸார் இன்று தெரிவித்தனர்.

தனது மகளை

2

## தமிழர் தாயகத்தில் போதைப்பொருள் பரவலுக்குப் பின்னால் அரச படைகள்

### சபையில் கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு



வடக்கு, கிழக்கில் போதைப் பொருள் பரவலுக்குப் பின்னால் படையினரும் பொலிஸாரும் செயற்படுகின்றனர் என்று நாடாளுமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டது.

2

## தமிழர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய மக்கள் முன் னணியின் நாடாளுமன்ற உறுப் பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் இந்தக் குற்றச் சாட்டை சபையில் நேற்று முன்வைத்தார்.

எனவே, இது தொடர்பில் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்ட பின்னர் அவற்றை அரச இரசாயனப் பகுப்பாய்வுக்கு அனுப்பும் போது உரிய சட்டமுறை பின்பற்றப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

குறிப்பாக நீதிமன்றத்தின் ஊடாக குறித்த போதைப்பொருட்கள் அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பப்படுவது சிறந்த முறை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொலிஸார் நேரடியாக அவற்றை ஆய்வுக்கு அனுப்பும் முறை இரத்துச் செய்யப்பட வேண்டும் என்றும் கஜேந்திர குமார் பொன்னம்பலம் எம்.பி. வலியுறுத்தினார்.

## தாயும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரகாஷ் காருண்யா ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

கணவன் - மனைவிக்கு இடையில் நேற்றிரவு வாய்த்தர்க்கம் ஏற்பட்டது எனவும், அதன் பின்னர் இன்று அதிகாலை 2 மணியளவில் மனைவியையும் பிள்ளையையும் காணவில்லை எனக் கணவன் தேடிய நிலையில் காலை இருவரும் வீட்டுக் கிணற்றில் சடலங்களாகக் காணப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துச் சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதேவேளை, சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் அ. ஜுட்சன் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்ததுடன் சடலத்தை மீட்டு உடல்கூற்றுப் பரிசோதனைக்கு அனுப்பி வைக்குமாறும் உத்தரவிட்டார்.

பொலிஸாரின் விசாரணைகளின் அடிப்படையில் உயிரிழந்த பெண்ணின் கணவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு, கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார்.

## நீதி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இல்லையென்றால் அது நீதியை மறுப்பதாகவும், அதிகாரப் பரவலாக்கத்துக்கு எதிரானதாகவும் அமையும் என்று சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நீதித்துறை தொடர்பான திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அபாயகரமான போதைப்பொருள் பயன்பாடு தொடர்பில் பார்க்கும் போது, இவர்களுக்கு வழங்கப்படும் பிணை விண்ணப்பம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினாலேயே வழங்கப்படுகின்றது.

நீதியை அணுகி அதனைப் பெற்றுக் கொள்வதற்கான முறையே இது. மேன்முறையீட்டு நீதிமன்றங்கள் கொழும்பிலேயே உள்ளன. மேல்நீதிமன்றம் மாகாணங்களில் உள்ளன. ஆனால், இது முழு நாட்டிலும் மத்திய இடத்தில் செய்வதாக இருக்கக் கூடாது. இது நீதியை மறுப்பதாக அமையும். அதிகாரப் பரவலாக்கத்துக்கு எதிரானதாகவும் இருக்கும்.

இதேவேளை, சிறைச்சாலைகளில் கைதிகளுக்குத் துன்பங்கள் இருக்கக் கூடாது. தண்டனை என்பது தீங்கானதாக இருந்தாலும் அதில் வகைப்பாடுகள் உள்ளன. அரச தரப்பில் உள்ளவர்கள் சிறைச்சாலைகளில் ஆடம்பர சொகுசு மாடிகளை அமைக்க எதிர்பார்க்கின்றனர். அப்போதுதான் அவர்கள் அங்கு சென்றால் சொகுசாக இருக்கலாம் என்று நினைக்கின்றனர். ஆனால், சிறைச்சாலையில் அனைவரும் சமமாக இருக்க வேண்டும். சிறைக் கைதிகளுக்கிடையே வகுப்புவாதத்தை உருவாக்கி விடக் கூடாது - என்றார்.

## இனப்பிரச்சினை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த எண்ணம் வரவேற்கத்தக்கதே. இதற்காக அனைத்துக் கட்சிகளையும் அழைத்து அந்தப் பேச்சைத் தொடங்க வேண்டும்.

எங்களுடைய தீர்வானது அனைத்துக் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சமஷ்டியாகவே இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம்.

வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினர் 100 நாள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறைமையிலான அதிகாரப் பகிர்வைத் தர வேண்டும் என்று 100 நாள் வேலைத்திட்டத்தின் இறுதி நாளில் அவர்கள் மக்கள் பிரகடனத்தை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தி மாகாண சபைத் தேர்தலை நடத்தி, மாகாண சபை முறைமையை அதிகாரத்துடன் செய்ய வேண்டும்.

அரசின் நல்லிணக்கத்தின் கீழ் பொதுமன்னிப்பின் கீழ் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது நல்லிணக்கத்தையே காட்டுகின்றது.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கும் காலம் தாழ்த்தாது தீர்வு காணப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

## டயனாவுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் டயனா கமகேவின் கடவுச்சீட்டு, பிறப்புச் சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டை தொடர்பாகக் கடந்த ஒக்டோபர் மாதம் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாடு தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

தற்போது நடைபெற்று வரும் விசாரணைகள் தொடர்பான காரணிகளைச் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தவழக்கை இன்றுபரிசீலனைக்கு எடுத்துக்கொண்ட கொழும்பு பிரதம நீதிவான், இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவுக்கு வெளிநாட்டுப் பயணத்தடை விதித்தார்.

## மாணவியை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர் தொடர்ந்தும் தாக்கினார் என்றுகுறித்ததாய்தமதுமுறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

சிறுமி தற்போது தங்காலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், கைது செய்யப்பட்ட சந்தேகநபரானஆசிரியர்சிறுமியின்வகுப்பாசிரியர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## இலங்கையர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக இந்திய தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் உள்ளிட்ட சந்தேகநபர்கள் பல நாடுகளில் இருந்து விசா பெற்றுக் கொள்வதற்காகப் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து கடவுச்சீட்டுப் பெற முயற்சித்துள்ளனர் என்று பெங்களூர் பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கை மற்றும் நாடளாவியரீதியில் 400க்கும் அதிகமான முகவர்கள்
douglas & sons (pvt) ltd
290/25, Sri Sangharaja Mawatha, Colombo 10
0777755598 | 0701630209 | 0772211211
www.dslsolarenergy.com
MARKETED BY DSL, POWERED BY OKAYA & MICROTEK
BOC · SampathBank · COMMERCIAL BANK · HNB

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வரலாற்றுத் தீர்ப்பு

அரசியல் விருப்பு – வெறுப்புகள், அழுத்தங்கள், எதிர்பார்ப்புகளை மீறி, சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் உயர் நிலையில் செயற்பட்டு, இந்திய நீதித்துறை தனது தனித்துவத்தையும் உயர்வையும் மீண்டும் ஒரு தடவை நிரூபித்து இருக்கின்றது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் எஞ்சிய ஆறு பேரையும் விடுதலை செய்து, இந்திய உச்சநீதிமன்றம் இன்று வழங்கிய வரலாற்று தீர்ப்பு இந்திய நீதித்துறையின் தனித்துவச் சிறப்புக்கு மற்றொரு சான்று.

இந்தக் கொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட 26 பேருக்கு சென்னை பூவிருந்தவல்லி தடா நீதிமன்றம் எடுத்த எடுப்பிலேயே 1998 ஆம் ஆண்டு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்து அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

பின்னர் மேன்முறையீட்டு வழக்கில் சாந்தன், முருகன், நளினி, பேரறிவாளனுக்கு மட்டும் தூக்கு தண்டனை உறுதியானது. 2000 ஆம் ஆண்டில் நளினியின் தூக்கு தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

இதன் பின்னர் உச்சநீதிமன்றத்தினால் 2014 ஆம் ஆண்டு பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோரின் தூக்கு தண்டனையும் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

பேரறிவாளன் தன்னை விடுதலை செய்யக்கோரி உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

அந்தச் சமயத்தில் பேரறிவாளன் உட்பட அந்த வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவிக்கும் ஏழு பேரையும் அவர்களின் ஆயுள் தண்டனைக் காலம் கடந்து விட்டமையால் விடுதலை செய்யலாம் எனத் தமிழக அரசு முடிவு செய்தது. தமிழக அமைச்சரவை எடுத்த இந்த முடிவை மத்திய அரசு கடுமையாக எதிர்த்தது.

தமிழக அமைச்சரவையின் முடிவுக்கு ஆளுநர் மூலம் அனுமதி தராமல் தடுத்து, அவர்களின் விடுதலைக்கு முட்டுக்கட்டை போட்டு வைத்திருந்தது இந்திய மத்திய அரசு.

ஆளுநரின் இந்த மெத்தனப் போக்குக்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்தும் ஆளுநரோ, அவரை வழிப்படுத்தும் மத்திய அரசோ அசைந்து கொடுக்கவில்லை.

பேரறிவாளனின் 30 ஆண்டுக்கு மேலான சிறைவாசம், நன்னடத்தை, பரோல் கால செயற்பாடுகள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து உச்சநீதிமன்றம் தனக்கான சிறப்பு அதிகாரங்களை வழங்கும் இந்திய அரசியல் சாசனத்தின் 142 வது பிரிவின் கீழ் பேரறிவாளனை விடுதலை செய்து முதலாவது அதிரடித் தீர்ப்பை வழங்கியது.

மத்திய அரசு மற்றும் காவல் துறையின் கடும் ஆட்சேபத்திற்கு மத்தியிலும் பேரறிவாளனுக்கு வழங்கிய நீதி நிவாரணத்தை எஞ்சிய அறுவருக்கும் வழங்கி, அவர்களையும் விடுவித்து, இன்று இந்திய உச்ச நீதிமன்றம் வரலாற்றுத் தீர்ப்பளித்திருக்கிறது.

நீதியை, நீதியான பார்வையுடன் நிலைநாட்ட முயலும் இந்தத் துணிச்சலான தீர்ப்பு, இங்கு இலங்கையில் தமிழர்களுக்கு நீதியை தனித்துவத்துடன் வழங்கப் பின்னடித்து நிற்கும் நீதித்துறைக்கு ஒரு நல்வழி காட்டும் கலங்கரை விளக்கமாக அமைந்தால் நல்லது.

இந்திய நீதித்துறையின் தனித்துவமான, மேன்மையான செயற்பாடுகள் உலக அளவில் மெச்சி பேசப்படுவதற்கு இத்தகைய தீர்ப்புகளே முக்கிய காரணமாகும்.

## யாழ். பல்கலைக் கழகத்தின் கலைப்பீட மாணவர்களுக்கான 2 ஆவது ஆய்வரங்கு!




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட இளங்கலை மாணவர்களுக்கான இரண்டாவது ஆய்வரங்கு நேற்று (வியாழக் கிழமை) இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நேற்று காலை 9 மணியளவில் ஆய்வரங்கின் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெற்றது.

எகெட் செயற்றிட்டத்தின் நிதி அனுசரணையுடன் நடைபெற்ற ஆய்வரங்கானது, 'பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிகளிடையே வழமைக்கு திரும்புதலும் மீண்டெழும் தன்மையைக் கட்டியெழுப்புதலும்' எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப் பட்டது. கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகர் தலைமையில் நடைபெற்ற இந்த ஆய்வரங்கின் அங்குரார்ப்பண நிகழ்வில் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டதுடன் திறவுரையை கொழும்புப் பல்கலைக்கழகப் பொருளியல்துறை பேராசிரியர் கோ.அமிர்தலிங்கம் 'இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி' எனும் கருப்பொருளில் நிகழ்த்தினார்.

இந்த ஆய்வு மாநாட்டுக்கென யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீடத்தின் இளங்கலை மாணவர்களிடமிருந்து தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளிலமைந்த ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பட்டு, அவற்றிலிருந்து 125 ஆய்வுக் கட்டுரைகள் தெரிவுசெய்யப்பட்டன.

தெரிவுசெய்யப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட எட்டு ஆய்வுத் தடங்களில் ஆய்வாளர்களால் அளிக்கை செய்யப்பட்டன. இந்த ஆய்வுத் தடங்களை துறைசார் பேராசிரியர்கள் தலைமையேற்று நடத்தினர்.

இந்த மாநாட்டில் அளிக்கை செய்யப்படும்; ஆய்வுக்கட்டுரைகள் வரலாறு மற்றும் பண்பாட்டு மேம்பாடு, அனர்த்த முகாமைத்துவம், தொல்லியல் மற்றும்; பண்பாட்டு பல்வகைமை, உணவும் போசாக்கும், வறுமை மற்றும் உணவுப்பாதுகாப்பின்மை, மனித உரிமை சார் பிரச்சினைகள், ஊடகமும் சமூகமும், ஒழுக்கவியலும் மானிட வாழ்வும், மொழி, இலக்கியம் மற்றும் மொழிபெயர்ப்பு, பால் நிலையும் மேம்பாடும், இனத்துவமும் மோதல் தீர்வும், சுகாதாரமும் நல்வாழ்வும், சமூக–பொருளாதார சமத்துவமின்மையும் நீதியும், நல்லிணக்கமும் நிலைமாறு கால நீதியும், பொருளாதார நெருக்கடியும் இலங்கைச் சமூகமும், சட்டமும் ஒழுங்கும், சமகால சமூகத்தில் சமயம், கொவிட் – 19 பெருந்தொற்றும் இலங்கைச் சமூகமும், வேறுபட்ட பண்பாடுகளில் அழகியல், சமூகமாற்றமும் சமகால சமூகப் பிரச்சினைகளும், சமுதாய தாங்குதிறன், சமுதாய மேம்பாடும் பிராந்தியத் திட்டமிடலும், கல்வியும் சமூகமும் மற்றும் காலநிலை மாற்றமும் சுற்றுச்சூழல் பிரச்சி னைகளும் எனப் பல்வேறு உப தலைப்புக்களை அடியொற்றி அமைந்தது.

## அக்கரைப்பற்று பிரதேசசபையில் புதன்கிழமை காய்கறி அறுவடை





(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதியின் நாட்டு மக்களுக்கான 'பாதுகாப்பான, முழுமைப்படுத்தப்பட்டஉணவு' என்ற திட்டத்தின் அடிப்படையில் அக்கரைப் பற்று பிரதேச சபையினுடைய முன்வளாகத்தில் கத்தரி, மிளகாய் போன்ற மரக்கறி வகைகள் முன்னோட்டமாக (ஒத்திகையாக்) பயிரிடப்பட்டன. அப்பயிர்களில் இருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை காய்கறி அறுவடை நிகழ்வு நடைபெற்றது.

திட்டத்தின் ஒத்திகையில் கிடைத்த பரிபூரணமான திருப்திகளோடு அக்கரைப்பற்று பிரதேச சபை உலக வங்கியின் உதவியுடன் (LDSP) திட்டத்தின் ஊடாக ஒவ்வொரு வட்டாரங்களிலும் தெரிவு செய்யப்படும் குடும்பங்களின் வாழ்வாதாரங்களை ஊக்குவிக்க காய் கறி நடும் திட்டத்தினையும் ஒரு அங்கமாக செயல் படுத்த ஏகமானதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ. றாஸீக் தெரிவித்தார்.

மேலும் அறுவடையில் பங்கெடுத்த அக்கரைப்பற்று பிரதேச சபையின் உப தவிசாளர், உறுப்பினர்கள், சபையின் செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எல்லோருக்கும் அவர் நன்றி தெரிவித்தார்.

## அக்கரைப்பற்றில் உலர் உணவு பொருள் வழங்கல்

(நூருல் ஹுதா உமர்)

அக்கரைப்பற்று சகாத் நிதியம்,ஜம்மியத்துல் உலமா சபை, பள்ளிவாசல்கள் மற்றும் சமூக நிறுவனங்கள் இணைந்து தேவையுடைய சுமார் 5,000 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கிவைத்தன.

இதில் அக்கரைப்பற்று பெரிய பள்ளிவாசலின் தலைவர் எஸ் எம் சபீஸ், சகாத் நிதியத்தின் தலைவர் ரஹ்மத்துல்லாஹ் மௌலவி, ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவர் கலாமுல்லாஹ் மௌலவி, ஹபீப் மௌலவி மற்றும் அதன் உறுப்பினர்கள் பொது நிறுவனங்களின் அங்கத்தவர்கள் போன்றோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# சீனா - அமெ. தலைவர்கள் பாலியில் நேரில் பேசுவர்



வாஷிங்டன், நவ.11

இந்தோனேசியாவின் பாலி நகரில் எதிர்வரும் 14 ஆம் திதி ஜி20 உச்சிமாநாடு நடைபெற உள்ள நிலையில் 2 நாள்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், சீன அதிபர் ஜி ஜின்பிங் உள்பட அந்த அமைப்பில் இடம்பெற்றுள்ள நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர்.

இந்நிலையில் இந்த மாநாட்டிற்கு இடையே சீன அதிபர் ஜி ஜின்பிங்கை, அமெரிக்க அதிபர் ஜோ பைடன் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்த உள்ளார் என வெள்ளை மாளிகைத் தகவல்கள் தெரிவித்துள்ளன. தைவான் பிரச்சினை தொடர்பாக சீனா அமெரிக்கா இடையே பதற்றமான சூழல் நிலவுகின்ற இந்த நிலையில் 3 ஆவது முறையாக சீன அதிபரான பின்பு, ஜி ஜின்பிங்கை, ஜோ பைடன் சந்திக்க உள்ளார்.

அப்போது இரு தலைவர்கள் இடையே தகவல் தொடர்புகளை மேலும் வலுப்படுத்துவது மற்றும் இரு நாடுகளிடையேயான உறவுகள் குறித்தும் விவாதிக்கப்படும் என வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் கரீன் ஜீன்-பியர் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

## மதுபான விடுதியில் துப்பாக்கிச் சூடு; மெக்சிக்கோவில் ஒன்பது பேர் சாவு!



மெக்சிகோ, நவ.11

மத்திய மெக்சிகோவில் குவானாஜுவாடோ மாகாணத்தில் உள்ள மதுபான விடுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 9 பேர் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் காயமடைந்தனர்.

அபாசியோ எல் ஆல்டோ நகரில் செயல்பட்டு வரும் மதுபான விடுதியினுள் கடந்த புதன்கிழமை இரவு 9 மணியளவில் ஆயுதம் ஏந்திய கும்பல் ஒன்று திடீரென புகுந்து, உள்ளே இருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது.

இந்தக் கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் மதுபான விடுதியில் இருந்த ஐந்து ஆண்களும் நான்கு பெண்களும் கொல்லப்பட்டனர். 2 பெண்கள் காயமடைந்தனர்.

காயமடைந்த பெண்களின் உடல் நிலை தற்போது சீராக உள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் தாக்குதல் நடத்தியவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

மெக்சிகோவின் தொழில்துறை மையமான குவானாஜுவாடோ பகுதியில், சமீபத்திய ஆண்டுகளில் கும்பல் வன்முறைகள் அதிகரித்துள்ளன. கடந்த மாதம் இரபுவாடோ நகரில் உள்ள மதுபான விடுதியில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. மெக்சிகோ ஜனாதிபதியாக 2018 இல் பதவியேற்ற ஆண்ட்ரெஸ்மானுவல் லோபஸ் ஒப்ரடோர், மெக்சிகோவில் தலைவிரித்தாடும் கும்பல் வன்முறையைக் குறைப்பதாக உறுதியளித்திருந்தார்.

எனினும் இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து அரங்கேறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## மேரிலாந்து துணை ஆளுனராக இந்திய வம்சாவளி பெண் மில்லர்

வாஷிங்டன், நவ.11

அமெரிக்காவின் மேரிலாந்து மாகாண துணை ஆளுனராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அருணா மில்லர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அருணா மில்லர் 6 நவம்பர் 1964 அன்று ஆந்திரப்பிரதேசத்தில் பிறந்தவர். தனது ஏழு வயதில்

தனது பெற்றோருடன் அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்தவர் எனக் கூறப்படுகிறது.

1989 இல், மிசோரி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் சிவில் பொறியியல் பட்டம் பெற்றார். மாண்ட்கோமெரி கவுண்டியில் உள்ள உள்ளூர் போக்குவரத்துத் துறையில் 25 ஆண்டுகள் பணியாற்றினார்.

58 வயதான அருணா மில்லர் அதிபர் ஜோ பைடனின் ஜனநாயகக் கட்சி யைச் சேர்ந்தவர்.

மேரிலாந்தின் லெப்டினன்ட் ஆளுனர் தேர்தலில் அருணா வெற்றி பெற்றுள்ளார். ஆளுனராக வெஸ் மூர், துணை ஆளுனராக இந்திய வம்சாவளியான அருணா மில்லர் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர். இதன் மூலம் மேரிலாந்தின் முதல் இந்திய வம்சாவளி துணை ஆளுனர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

## ரஷ்ய - உக்ரைன் போரில் இதுவரையில் இரண்டு லட்சம் இராணுவ வீரர்கள் சாவு



கீவ், நவ.11

கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி ஆரம்பித்த உக்ரைன் மீதான ரஷ்யப் படைகளின் தாக்குதல் தற்போது வரை தொடர்ந்து நீடித்து வரும் நிலையில், போரில் இருதரப்பிலும் அதிக உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது. மேலும், இந்த போரில் உக்ரைனின் பல்வேறு நகரங்கள் ரஷ்யப் படைகள் வசம் சென்றுள்ளன.

இந்த நிலையில், ரஷ்யா – உக்ரைன் போரில் இரு நாடுகளின் தரப்பிலும் இதுவரை 2 லட்சம் ராணுவ வீரர்கள் பலியாகியுள்ளனர் என அமெரிக்கா தெரிவித்துள்ளது. இது குறித்து அமெரிக்க மூத்த ராணுவ அதிகாரி ஜென் மார்க் தெரிவிக்கையில் ரஷ்யா– உக்ரைன் போரில் 40,000 பொது மக்கள் பலியாகியுள்ளனர். இரு நாட்டு தரப்பிலும் 2 லட்சம் இராணுவ வீரர்கள் பலியாகியுள்ளனர். பரஸ்பர அமைதிவெறும் ராணுவ நடவடிக்கைகளால் மட்டுமே முடியாது. அதற்கு நீங்கள் வேறு வழிகளில் திரும்ப வேண்டும். என்று கூறினார்.

இந்நிலையில் ரஷ்ய அதிபர் புடினின் போர் நடவடிக்கையால் உக்ரைனில் கடந்த ஆறு மாதங்களில் 50 லட்சம் ஏக்கர் வனப்பகுதிகள் அழிக்கப்பட்டு இருப்பதாகவும் உக்ரேன் அதிபர் ஜெலன்ஸ்கி குற்றம்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாலைதீவு குடியிருப்பில் தீ விபத்து இந்தியர்கள் உள்பட 10 பேர் பலி!





மாலே,நவ.11

மாலைதீவு தலைநகர் மாலேவில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பொன்றில் பயங்கர தீவிபத்து ஏற்பட்டது. நேற்றுமுன்தினம் நள்ளிரவு அடுக்குமாடிக் கட்டடம் ஒன்றில் வாகனம் நிறுத்தும் இடத்தில் ஏற்பட்ட தீ விபத்தை அடுத்துத் தீ, அருகில் உள்ள வீடுகளுக்கும் பரவியது.

இதில் 10 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்த 10 பேரில் 9 பேர் இந்தியர்கள் என முதற்கட்ட விசாரணைகளில் தகவல் வெளியாகியுள்ளது. மேலும் பலர் படுகாயங்களுடன் அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக மாலேயில் உள்ள அரசு உயரதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களை அடையாளம் காணும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் இந்தியர்கள். மற்றவர்கள் வங்கதேசத்தை சேர்ந்தவர்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது, தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் தகவல்களை வெளியுறவுத்துறை அதிகாரிகள் சேகரித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்னிந்தியாவில் ஆரம்பம் வந்தே பாரத் ரெயில் சேவை

## தொடக்கி வைத்தார் பிரதமர் மோடி



பெங்களர், நவ.11

இந்தியாவின் ஐந்தாவதும், தென்னிந்தியாவின் முதலாவதுமான 'வந்தே பாரத்' ரெயில் சேலையை இந்தியப்பிரதமர் மோடி சென்னை – மைசூர் இடையே இன்று ஆரம்பித்த வைத்துள்ளார்.

மோடி தமிழகம், காநாடகா, ஆந்திரா, தெலுங்கானா ஆகிய 4 தென் மாநிலங்களில் இன்று முதல் 2 நாள்கள் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார். இந்த தென்மாநில சுற்றுப்பயணத்துக்காக பிரதமர் மோடி இன்று காலை டெல்லியில் இருந்து சிறப்பு விமானத்தில் புறப்பட்டு பெங்களூர் வந்தார். இங்கு இன்று காலை 9.45 மணிக்கு கன்னட பக்தி இலக்கிய முன்னோடியான கனக தாசா மற்றும் மகரிஷி வால்மீகி ஆகியோரின் சிலைகளுக்கு மாலை அணிவித்து முதலில் மரியாதை செலுத்தினார்.

பின்னர், பிரதமர் மோடி நாட்டில் 5 ஆவதாகவும், தென் இந்தியாவில் முதலாவதாகவும் 'வந்தே பாரத்' விரைவு ரெயில் சேவையை சென்னை–மைசூர் இடையே இன்று காலை 10 மணியளவில் கொடியசைத்து தொடங்கி வைத்தார். பின்னர் காலை 11.30 மணிக்கு பெங்களூரு கெம்பேகவுடா சர்வதேச விமான நிலையத்தில் ரூபா 5 ஆயிரம் கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 2ஆவது முனையத்தை திறந்து வைத்தார்.

பெங்களூர் விமான நிலையத்தில் நெரிசலை சமாளிப்பதற்காக கட்டப்பட்டுள்ள இந்த முனையம் செயல்பாட்டுக்கு வந்தால் பயணிகள் வருகை மற்றும் விமான சேவை இரண்டு மடங்காக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், இன்று பெங்களூரில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கிறார். அவரது வருகையையொட்டி பெங்களூரில் 3 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.மேலும், பெங்களூர் கெம்பே சர்வதேச விமான நிலையம், ஆளுனர் மாளிகை மற்றும் முக்கிய வீதிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீரில் பயங்கரவாதி ஒருவர் பொலிஸாரால் சுட்டுக் கொலை



ஸ்ரீநகர்,நவ.11

ஜம்மு காஷ்மீர் மாநிலம் சோபியான் மாவட்டம் சுப்ரீன் பகுதியில் இன்று அதிகாலை பயங்கரவாதிகள் சிலர் பதுங்கி இருக்கின்றனர் எனப் பாதுகாப்பு படை பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதையடுத்து பாதுகாப்பு படையினர் விரைந்து சென்று தேடுதலில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு மறைந்திருந்த பயங்கரவாதிகள் பொலிஸார் மீது துப்பாக்கியால் சுட்டனர். பொலிஸாரும் பதில்த் தாக்குதல் நடாத்தினர். சிறிது நேரம் துப்பாக்கி சண்டை நடந்தது. இதில் பயங்கரவாதக் குழுவைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றவர்கள் தப்பி ஓடி விட்டனர்.

பொலிஸார் அவர்களைத் தேடி வருகின்றனர். சுட்டுக்கொல்லப்பட்ட பயங்கரவாதியின் பெயர், விபரங்கள் தெரியவந்துள்ளன. இவர் ஜெய்ஷ்–இ–முகமது இயக்கத்தை சேர்ந்தவர் என்பதும் தெரியவந்துள்ளது. குறித்த நபர் சோபியான் மற்றும் புல்கான் பகுதியில் பல்வேறு பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டு வந்தமைகண்டறியப்பட்டுள்ளதுடன், அவரிடம் இருந்து பயங்கர ஆயுதங்களையும் பொலிஸார் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆயிரம் தமிழக விவசாயிகளுக்கு இலவசமாக மின்சார விநியோகம்

## திட்டத்தை ஆரம்பித்து வைத்தார் ஸ்டாலின்..!!



கரூர், நவ.11

கரூரில் ஆயிரம் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆரம்பித்து வைத்துள்ளார் . இதன் பின்னர் பேசிய மு.க. ஸ்டா லின் மண் காக்கும் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதால் என் மனதும் குளிர்ந்துள்ளது. தமிழக அரசின் வரலாற்றில் பொன்எழுத்துக்கள் பொறிக்கப்படும் நாள் இந்த நாள் .

இதற்கு முன் எந்த அரசும் இப்படியொரு சாதனையை செய்தது கிடையாது. ஒரு லட்சம் இலவச மின் இணைப்பு சாத்தியமா? என்று கேட்டார்கள். முடியுமா? என்பதை முடித்து காட்டுவதுதான் திமுக. தமிழ்நாட்டில் விலைவாசி குறைவாக உள்ளது, பணப்புழக்கம் அதிகரித்துள்ளது .தமிழ்நாட்டில் வாழ்க்கை தரம் தற்போது நிலையானதாக உள்ளது. என தெரிவித்தார்.



# மியான்மார் சென்று சிக்கி தவித்த எண்மர் தமிழகம் வந்தடைந்தனர்

மீனம்பாக்கம், நவ.11

வேலைக்காக மியான்மார் நாட்டுக்குச் சென்று அற்க உரியமுறையில் வேலைகள் வழங்கப்படாமல் இடையில் சிக்கித்தவித்த மேலும் 08பேர் தமிழகத்துக்கு அழைத்த. வரப்பட்டுள்ளனர்.

தமிழகத்தில் இருந்து மியான்மார் நாட்டுக்கு தகவல் தொழில் நுட்ப பணிக்காகச் சென்ற வாலிபர்களுக்கு, அங்கு உரிய வேலை வழங்கப்படாமல் சட்டவிரோதமான பணிகளை செய்ய சொல்லியும், அதை மறுப்பவர்கள் துன்புறுத்தப்படுவதாகவும், அவர்களை மீட்க நடவடிக்கைஎடுக்கும்படியும் பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோர் சார்பில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது. இதனையடுத்து இந்திய தூதரக உதவியுடன் தமிழக வெளிநாட்டு வாழ் தமிழர்கள் நலத்துறை மூலமாக கடந்த மாதம் மியான்மரில் சிக்கி தவித்த 18 பேரை மீட்டு அழைத்து வரப்பட்டனர். இந்நிலையில், 2 ஆவது கட்டமாக மேலும் 8 பேர் நேற்று மியான்மரில் இருந்து மீட்கப்பட்டு தாய்லாந்து வழியாக சென்னை விமான நிலையம் வந்தனர். சென்னை விமான நிலையத்தில் 8 பேரையும் தமிழக வெளிநாட்டு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வரவேற்றதுடன், பின்னர்தமிழக அரசின் செலவில் 8 பேரும் அவர்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். மேலும், தவறான வழி காட்டுதல் செய்கின்ற ஏஜெண்டுகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கடந்த 10 நாட்களுக்கு முன்பு கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் திருச்சியை சேர்ந்த இருவர் மீது வழக்குப்பதிவு செய்து குண்டர் சட்டத்தில் கைது செய்து சிறையில் அடைக்கப்பட்டு உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கடும் மழையால் அம்பாறை வெள்ளத்தில் மிதக்கின்றது











(பாரூக் சிஹான்)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை,அக்கரைப்பற்று, நிந்தவூர், நாவிதன்வெளி, சம்மாந்துறை பிரதேச பகுதிகளில் வாழும் மக்கள் மழை வெள்ளம் காரணமாக பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த மழை வெள்ளத்தின் காரணமாக இம்மாவட்டத்தின் பெரிய நீலாவணை,பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, காரைதீவு, சம்மாந்துறை,அக்கரைப்பற்று பகுதிகளில் வதியும் பல குடும்பங்கள் வெள்ளத்தினால் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளமையுடன் தற்போது அங்குள்ள மக்கள் வீடுகளிற்குள் மழை வெள்ளம் உட்புகும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

மழை நீர் வழிந்தோடுவதற்குரிய முறையான வடிகால் இன்மையே இதற்கு முக்கிய காரணம் என்ற குற்றச்சாட்டும் மக்களினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரதேசங்கள் ஒவ்வொரு வருடமும் மழையினாலும் அதனால் ஏற்படும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. சில வேளை இம்மக்கள் இடம்பெயரும் நிலைமையும் ஏற்படுகிறது.

இப்பகுதிகளில் வசிக்கின்ற கணிசமான மக்களின் வாழ்வாதாரம் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஒழுங்கான வீடமைப்பு வசதி இல்லை. ஒழுங்கான வீதி கிடையாது. மின் சார வசதி இல்லை. நீர் வடிந்தோட ஒழுங்கான வடிகால்கள் இல்லை. சிறுவர்கள் பாடசாலைக்கு செல்ல கஷ்டப்படுகின்றனர். தொழில் செய்வது சிரமமாக உள்ளது. இது தான் அம்மக்களின் நிலையாக உள்ளது. கடந்த சில நாள்களாக பெய்துவரும் அடைமழை காரணமாக அப்பகுதியில் வசிக்கும் மக்களின் வீடுகளுக்குள் மழை வெள்ளம் தேங்கி நிற்பதால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் அன்றாட உணவுகளை சமைத்து உண்ண முடியாத நிலையில் மக்கள் காணப்படுகின்றனர்.

தற்போது வெள்ள நீர் வடிந்தோடுவதற்காக சில முகத்துவாரங்கள் வெட்டப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், வெள்ள நீர் தேங்கி காணப்படுகின்ற நிலைமையே தொடர்கதையாகவுள்ளது.

## தம்பலகாமத்தில் விபத்தில் படுகாயமுற்றது சருகுப்புலி







(ஹஸ்பர்)

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டி – திருகோணமலை பிரதான வீதியின் தம்பலகாமம் சந்தியை அண்மித்த சுவாமிலை பகுதியில் சருகுப்புலி காருடன் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் இன்று காலை இடம் பெற்றுள்ளது.

காட்டுப்பகுதியில் இருந்து கோழியை பிடித்துக் கொண்டு பிரதான வீதியை கடக்க முற்பட்ட போதே காருடன் மோதி சருகுப் புலி விபத்துக்குள்ளானது. பலத்த காயங்களுக்கு உள்ளான இந்தப் புலியை வனஜீவராசிகள் திணைக்களத்தினர் உரிய பகுதிக்கு சென்று மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கந்தளாய் வனஜீவராசி திணைக்களத்தினர் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.




## ‘மனிதம் இல்லா பூமி’ கவிதை நூல் மாளிகைக்காட்டில் அறிமுக விழா

(எம்.என்.எம்.அப்ராஸ்)

அக்குறணை அஸ்மியா நிஸாம் எழுதிய ’மனிதம் இல்லா பூமி’ கவிதை நூல் அறிமுக நிகழ்வு கரவாகு கலை இலக்கிய மன்றம் மற்றும் வியூகம் ஊடக வலையமைப்பு ஏற்பாட்டில் கவிஞர் பாவேந்தல் பாலமுனை பாறூக் தலைமையில் அம்பாறை மாவட்டம் மாளிகைக்காடு சபீனா முஸ்லிம் வித்தியாலய மண்டபத்தில் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந் நூல் அறிமுக நிகழ்வில் பொதுச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினரும், முன்னாள் சாய்ந்தமருது பிரதேச செயலாளருமான ஏ.எல்.எம்.சலீம் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிப்பார். மற்றும் கௌரவ அதிதிகள், சிறப்பு அதிதிகள், கலை, இலக்கிய அதிதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் இதில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கண்டி மாவட்டம் அக்குறணையையை சேர்ந்த அஸ்மியா நிஸாமின் முதலாவது வெளியீடு நூல் ’மனிதம் இல்லா பூமி’என்பது குறிப்பிடத்தக்கது.

# நீதித்துறை கட்டமைப்பில் சாதகமான மாற்றங்களை ஏற்படுத்த அமெரிக்காவின் ஒத்துழைப்புகள் அவசியம்

## நீதி அமைச்சர் விஜேதாஸ கோரிக்கை



பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளைப் போன்றே இலங்கையின் நீதித்துறை கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் அமெரிக்காவின் ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாக நீதித்துறை, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு சீர்திருத்த அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீதித்துறை, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு சீர்திருத்த அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாச ராஜபக்ஷ மற்றும் அமெரிக்க நீதிமன்ற திணைக்களத்தின் சட்ட ஆலோசகர் ஜோனஸ் எம்.வோகர் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று கடந்த புதன்கிழமை நீதி அமைச்சில் இடம்பெற்றது.

இதன் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நீதிமன்ற கட்டமைப்பிற்குள் தற்போது நிலவும் வழக்கு விசாரணை தாமதமடைதல் , குறிப்பாக குற்றவியல் வழக்குகள் தாமதமடைதலைத் தவிர்ப்பதற்காக இதுவரையில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் மற்றும் குற்றவியல் கட்டளை சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள புதிய திருத்தங்கள் தொடர்பிலும் , இது தொடர்பில் அமெரிக்காவில் நடைமுறையிலுள்ள நடைமுறைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

அமெரிக்காவில் வழக்கு காலம் தாழ்த்தப்படுவதை தவிர்ப்பதற்கான நடைமுறையாக குற்றவாளிகள் குற்றத்தை ஒப்புக்கொள்வதன் மூலம், நீண்ட விவாதங்கள் இன்றி வழக்கை நிறைவு செய்யப்படுகின்றமை காணப்படுவதாக அமெரிக்க நீதிமன்ற திணைக்களத்தின் சட்ட ஆலோசகர் ஜோனஸ் எம்.வோகர் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக பல்வேறு குற்றச் செயல்களில் பரஸ்பர ஒத்துழைப்புச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகள் மற்றும் நாடு கடத்தல் சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பில் பயிற்சிகள் தேவைப்படுமெனில் அதனை வழங்குவதற்கு தயாராக உள்ளதாகவும் ஜோனஸ் எம்.வோகர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் போது கருத்து வெளியிட்ட அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ , இரு நாடுகளுக்குமிடையில் நீண்டகால நட்புறவு பேணப்பட்டு வருவதாகவும் , நாட்டின் பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுகளுக்காகவும் , இலங்கையின் நீதித்துறை கட்டமைப்பில் ஏற்படுத்தப்பட வேண்டிய சாதகமான மாற்றங்கள் தொடர்பிலும் அமெரிக்காவின் ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# இன, மத அடையாளங்களுடன் செயற்படுகின்ற அரசியல் கட்சிகளை இல்லாமல் செய்யவேண்டும்!

## நிமல் ஜி புஞ்சிஹேவா தெரிவிப்பு



இலங்கையில் இன, மத அடையாளங்களுடன் செயற்படும் கட்சிகளை எதிர்காலத்தில் இல்லாமல்செய்ய வேண் டிய தேவையுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி புஞ்சிஹேவா தெரிவித்தார்.

நாடாளுமன்ற தெரிவுக்குழுவால் முன்மொழியப்பட்ட உத்தேச தேர்தல் சட்ட மறு சீரமைப்பு தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் மக்கள் மயப்படுத்துவதற்காகவும் தேர்தல் ஆணைக்குழுவால் மட்டக்களப்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு,நாவற்குடாவில் உள்ள தனியார் விடுதியில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி புஞ்சிஹேவா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணா கரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

தேர்தல் ஆணைக்குழுவின் வழிகாட்டலின் கீழ் தேர்தல் முறைகளுக்கான சர்வதேச ஒன்றியம், ஜனநாயக சீர்திருத்தம் மற்றும் தேர்தல் ஆய்வுகளுக்கான நிறுவனம் என்பன இணைந்து இந்தக் கலந்துரையாடலை முன்னெடுத்தன.

இந்தக் கலந்துரையாடல் நிகழ்வில் தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க, தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது உத்தேச நாடாளுமன்ற தெரிவுக்குழுவால் முன்மொழியப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது. இதனை அமுல்படுத்துவதற்குத் தேவையான செயல்முறைகள் மற்றும் மக்கள் மத்தியில் இது தொடர்பில் உள்ள கருத்துகள் இதன்போது பெறப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள்,உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், கல்விப்புலத்தோர், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர்.

தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு முன்பாக நாடாளுமன்ற தெரிவுக்குழுவால் முன்மொழியப்பட்ட உத்தேச தேர்தல் சட்ட மறுசீரமைப்பு தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான முன்மொழிவுகள் தொடர்பாகப் பல்வேறு தரப்பினரிடமும் கருத்துகள் பெறப்பட்டன.

இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

பெண்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளடக்கப்படாத தேர்தல் ஒன்று நியாயமான தேர்தலாக உள்ளடக்கப்படமுடியாது. முறைப்படுத்தல் செயற்பாடுகள் நியாயமான ரீதியில் முன்னெடுக்கப்படவேண்டும். தேர்தல்கள் மூலம் பெண்கள், இளைஞர்கள் அனைத்து துறைகளிலும் உள்ளடக்கப்படவேண்டும்.

தேர்தல் முறைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் இலங்கையில் சிறந்த அரசியல் கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும். அதற்கான ஏற்பாடுகளை தேர்தல் சட்டத்தில் செயற்படுத்தப்படவேண்டும். ஓர் அரசியலில் பிரவேசிக்கும் உறுப்பினரின் சொத்து விவரங்களை பொதுமக்கள் அறியவேண்டும், ஒருவர் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவாராயின் அவரது பதவி பறிக்கப்படும் வகையில் ஏற்பாடுகள் அமையவேண்டும்.

தேர்தல் குற்றங்களை விசாரணை செய்யும் வகையில் தேர்தல் நியாயசபையொன்று உருவாக்கப்படவேண்டும். அதன்மூலம் எதிர்காலத்தில் நீதியான – நியாயமான – தேர்தல் ஒன்று நடத்துவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தமுடியும்.

இனம், மதம் என்ற அடிப்படையில் 1933 ஆம்ஆண்டு தொடக்கம் இனரீதியான கட்சிகள் தோற்றம்பெற்றன. இவ்வாறான கட்சிகள் மூலம் பிரித்தாளும் நிலைமையை இல்லாமல்செய்ய வேண்டும். இவ்வாறான கட்சிகளுக்கு எதிராகவும் சில தீர்மானங்களை எடுக்கவேண்டிய நிலையுள்ளது.

மாகாணசபை தேர்தல்கள் நடைபெற்று நீண்டகாலம்சென்றுள்ளது. இன்றுமாகாணசபைகள் உள்ளனவா என்னும் நிலை காணப்படுகின்றது. மக்கள்சபைகளை வேறுநபர்கள் ஆட்சிசெய்வதற்கு அனுமதிக்கமுடியாது. நாங்கள் சில விடயங்களை செய்யவேண்டும். இல்லாது போனால் எமது எதிர்காலசமூகத்துக்குநாங்கள்பொறுப்புக்கூறவேண்டிய நிலையேற்படும். – என்றார்.

# கராப்பிட்டி புற்றுநோய் பிரிவில் திடீர் தீப்பரவல் ஏற்பட்டது!

கராப்பிட்டி வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவில் நேற்று (வியாழக்கிழமை) தீ பரவல் ஏற்பட்டுள்ளது என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் தீயணைப்பு வீரர்கள் குறித்த தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு கட்டுப்படுத்தினர்.

இதேவேளை தீப்பரவல் ஏற்பட்டமைக்கான காரணம் இது வரை தெரியவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நாட்டின் சீரற்ற காலநிலை தொடர்பில் யாழ். செயலகத்தில் கலந்துரையாடல்!



யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள சீரற்ற கால நிலை தொடர்பில் விசேட கலந்துரையாடல் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று (வியாழக்கிழமை) நடைபெற்றது.

இதன்போது சீரற்ற கால நிலையால் ஏற்படவுள்ள பாதிப்புக்களில் இருந்து மக்களைப் பாதுகாத்தல், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை முன்னெடுத்தல் உடனடி உதவிகள் வழங்கல் மற்றும் நிவாரணங்கள் வழங்கல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

மாவட்ட செயலரின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பிரதேசசெயலர்கள், பிரதேச சபை தவிசாளர், முப்படைகள், பொலிஸார் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு கிளிநொச்சியில் இராணுவத்தினரால் வீடுகள்!



குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இராணுவத்தால் அமைக்கப்பட்ட வீடுகள் கையளிக்கும் நிகழ்வுகள் கிளிநொச்சியில் நேற்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது.

முரசுமோட்டை கோரக்கன் கட்டு கிராமசேவகர் மற்றும் செல்வாநகர் ஆகிய பகுதிகளில் இராணுவத் தால் அமைக்கப்பட்ட வீடுகளை முல்லைத்தீவு மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சஞ்சிவ வணசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு கையளித்தார்.

இதன்போது 57 படைப்பிரிவின் கட்டளைத்தளபதி, ஏனைய அதிகாரிகள், கிராம சேவகர் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## முஸ்லிம் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்குமாறும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிசாத் பதியுதீன், நீதிஅமைச்சர்விஜயதாஸராஜபக்சவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச , புதிதாகக் கொண்டுவந்துள்ள 11 சட்டமூலங்களும் நாட்டுக்குத் தேவையானவை. ஆனால், இவற்றை நடைமுறைப்படுத்துகின்ற விடயங்களிலே, அரசியலுக்குஅப்பால்செயற்படுத்துவன் மூலமே இதனுடைய பலாபலன்களை மக்கள் ஏற்றுக்கொள்வர்.

அந்தவகையில், இந்தச் சட்டமூலங்கள் அரசியலுக்கு அப்பால் செயற்படுத்தப்பட வேண்டுமென வேண்டுகின்றேன். முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டமூலம் தொடர்பில் முன்னாள் நீதி அமைச்சர் அலி சப்ரி ஒரு குழுவை நியமித்தார். எனினும், சில அழுத்தங்கள் காரணமாக, இஸ்லாமிய விழுமியங்களுகு அப்பால் சில முடிவுகள் எடுக்கப்பட்டு, தற்போதைய நீதி அமைச்சராகிய உங்களிடம் அது வழங்கப்பட்டதாக நாம் அறிகின்றோம்.

எனவே, இந்த விடயம் சம்பந்தமாக, மக்களால்தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஒரு சந்திப்பை நீதி அமைச்சிலோ, நாடாளுமன்றத்திலோ விரைவில் ஏற்பாடு செய்து தருமாறுவேண்டுகோள்விடுக்கின்றேன்.

இது குறித்து எமது கருத்துக்களை எடுத்துரைப்பதற்கும் தவறுகளைச் சுட்டிக்காட்டி திருத்துவதற்கும் அது வழிகோலுமென நம்புகின்றேன். எனவே, இவற்றைச் சரியான முறையில் செய்ய வேண்டுமேயொழிய, அழுத்தங் கள் மூலம் இவற்றைக் கொண்டுவர முடியாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன் – என்றார்.

இதன்போது, பதிலளித்த நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச,

இவ்விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமுடன் பேச்சை மேற்கொண்டேன். மேலும், குழுவின் பரிந்துரைக்கு அமைய அந்தச் சட்டமூலம் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வார காலத்துக்குள் அனைத்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சில் ஈடுபடத் தயாராக இருக்கின்றேன் – என்றார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய ரிஷாத் எம்.பி,

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில், போராட்டங்களும் எதிர்ப்புக்களும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. தமிழ் இளைஞர்கள் பல வருடங்களாக சிறையில் வாடுகின்றனர். அதேபோன்று, முஸ்லிம் இளைஞர்கள், கல்விமான்கள் இந்தச் சட்டத்தின் காரணமாக அநியாயமாக, மூன்று வருடங்களுக்கு மேலாக சிறையில் வாடுகின்றனர். அவர்களுக்கு இன்னும் நியாயம் கிடைக்கவில்லை. எனவே, இந்தச் சட்டத்தில் திருத்தம் செய்யுமாறு வேண்டுகின்றேன்.

அத்துடன், தற்போது பேசுபொருளாக இருக்கும் மற்றுமொரு விடயம் என்னவெனில், சட்டக் கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் பரீட்சை எழுதுமாறு தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த விடயம் தொடர்பில், காலவரை ஒன்றை வழங்கி, பிரதம நீதியரசருடனும் இது குறித்து பேசி நடவடிக்கை ஒன்றை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்டில் தற்போது போதைப்பொருள் பாவனை அதிகரித்துள்ளது. இளைஞர்கள் மாத்திரமின்றி, மாணவர்களும் இதற்கு அடிமையாகி வருகின்றனர். எனவே, இதனைச் சீர்செய்யும் வகையில், கல்வி அமைச்சுடன் இணைந்து சட்டங்களை நடைமுறைப்படுத்தி இதற்கு முடிவுகட்ட வேண்டும். மாணவர்கள் இதற்கு அடிமைப்படுவதைத் தவிர்க்கும் வகையில், விசேட வேலைத் திட்டமொன்றைக் கொண்டுவாருங்கள்.

அதேபோன்று, 20ஆவது அரசமைப்புதிருத்தம்மூலம்நாம்அனுபவித்த கஷ்டங்கள் போதும். எனவே, 21ஆவது திருத்தத்தின் மூலம் எமக்கு ஒரு நம்பகத்தன்மை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, இன்னுமொரு முக்கியமான விடயத்தையும் இந்த உயர் சபையிலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நான்கடந்தவாரம்புத்தளம்சென்றிருந்த போது, தெங்கு மூலப் பொருட்கள் உற்பத்தியாளர்கள் எதிர்நோக்குகின்ற கஷ்டங்கள் தொடர்பில் என்னிடம் தெரிவித்தனர்.

15 வருடங்களுக்கு முன்னர் வாங்கிய உற்பத்திப் பொருட்களை, தற்பொழுதும் அதே விலைக்கே கொள்வனவு செய்கின்றனர். அப்போது 18 ரூபாவுக்கு வாங்கியதெங்குமட்டையை, இப்போதும் அதே விலைக்கே வாங்குகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் கைத்தொழில் அமைச்சர் விசேட கவனம் செலுத்தி, உலக சந்தையின் விலைக்கேற்ப தும்பு உற்பத்தியாளர்களின் பொருட்களுக்கான நியாயமான விலையை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றேன் –என்றார்.

## நளினி, முருகன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் பேரறிவாளன், நளினி, முருகன் உள்ளிட்ட 26 பேருக்குச் சென்னை பூவிருந்தவல்லி தடா நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

பின்னர் மேன்முறையீட்டு வழக்கில் பேரறிவாளன், நளினி, முருகன், சாந்தன் உள்ளிட்ட 7 பேருக்கு மட்டும் மரண தண்டனை உறுதியானது.

கடந்த 2000 ஆம் ஆண்டு நளினியின் மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டு பேரறிவாளன், சாந்தன், முருகன் உள்ளிட்ட 6 பேரின் மரண தண்டனை உச்ச நீதிமன்றத்தால் இரத்துச் செய்யப்பட்டு ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

பின்னர் தம்மை வழக்கில் இருந்து விடுதலை செய்யக் கோரி பேரறிவாளன் உச்ச நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடர்ந்தார்.

அதேநேரத்தில் பேரறிவாளன் உள்ளிட்ட ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் ஆயுள் தண்டனை அனுபவிக்கும் 7 பேரையும் விடுதலை செய்யலாம் என்று தமிழக அரசு முடிவெடுத்தது.

தமிழக அமைச்சரவையின் இந்தத் தீர்மானத்தை இந்திய மத்திய அரசு கடுமையாக எதிர்த்தது.

பேரறிவாளவன் தம்மை விடுதலை செய்யக் கோரிய வழக்கில் தமிழக அமைச்சரவை தீர்மானம் முக்கியமானதாக இருந்தது.

7 பேரை விடுதலை செய்யும் அமைச்சரவை முடிவு மீது ஆளுநர் எந்தப் பரிந்துரையும் செய்யாமல் இருந்ததால் உச்ச நீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்தது.

பின்னர் பேரறிவாளனின் 30 ஆண்டுகளுக்கு மேலான சிறைவாசம், நன்னடத்தை, விடுப்பு காலச் செயற்பாடுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்திய உச்ச நீதிமன்றம், தமக்கான சிறப்பு அதிகாரம் வழங்கும் அரசமைப்பின் 142 ஆவது பிரிவின் கீழ் பேரறிவாளனை விடுதலை செய்தது.

இதனடிப்படையில் தங்களையும் விடுதலை செய்ய வேண்டும் என நளினி, முருகன், சாந்தன் உள்ளிட்ட எஞ்சிய 6 பேரும் உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தனர்.

இந்தநிலையில், நளினி, முருகன் உள்ளிட்ட 6 பேரும் தாக்கல் செய்த மனு உச்ச நீதிமன்றில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்த நிலையில் ராஜீவ் காந்தி படுகொலை வழக்கிலிருந்து நளினி, முருகன், சாந்தன், ரவிச்சந்திரன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய 6 பேரையும் விடுதலை செய்ய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# திருகோணமலையில் நடந்த ‘கிடுகு வீடு’ நூல் அறிமுகவிழா






(அபு அலா)

பைந்தமிழ்ச் சுடர் நீலையூர் சுதாவின் ‘கிடுகு வீடு’ நூல் அறிமுக விழா நேற்று முன்தினம் திருகோணமலை நகரசபை மண்டபத்தில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது.

இவ்வறிமுக விழாவுக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம். பிஸ்.ரத்ணாயக்க முதன்மை விருந்தினராகவும், திருகோணமலை மாவட்ட செயலாளர் பீ.எச்.என்.ஜயவிக்ரம, சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளிதரன், கல்விஅமைச்சின்செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜீ.திசாநாயக்க, வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்சார், பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஏ.மன்சூர், பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) திருமதி ஆர்.யூ.ஜலீல் மற்றும் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர் உள்ளிட்ட பலர் கௌர விருந்தினராகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இதன்போது, கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன. புதிதாக நியமிக்கப்பட்ட கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பிஸ்.ரத்ணாயக்காவுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதிக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நால்வரில் மூவர் நேற்று (10) விடுதலை செய்யப்பட்டமைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஜனாதிபதிக்கும், நீதி அமைச்சருக்கும் நன்றி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற பல சட்டமூலங்கள் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பல ஆண்டுகளாகச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 8 பேருக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த மாதம் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்திருந்தார்.

பொதுமன்னிப்பு வழங்கப்பட்ட எண்மரில் 4 பேர் சட்டச் சிக்கல் காரணிகளால் சிறையில் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டனர்.

இவ்வாறு சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நால்வரில் மூவர் நேற்று விடுதலை செய்யப்பட்டமைக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நன்றி தெரிவித்தார்.

மிகுதியாகவுள்ள ஒருவரையும் விரைவில் விடுதலை செய்யுமாறும் அவர் ஜனாதிபதி மற்றும் நீதி அமைச்சரிடம் அவர் வலியுறுத்தினார்.

## பதவியைத்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

15ஆம் திகதி பி.ப. 2 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் ஆளுநர் ஜீவன் தியாகராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் காணி அமைச்சின் மேலதிக செயலர், காணி ஆணையாளர் நாயகம், காணி உரித்து திணைக்களத்தின் ஆணையாளர், நில அளவையாளர் நாயகம், இராணுவம், கடற்படை, விமானப் படை என்பனவற்றுடன், வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் காணி மேலதிக மாவட்டச் செயலர்கள், யாழ்ப்பாண பிரதேச செயலர், தெல்லிப்பழை பிரதேச செயலர், மருதங்கேணி பிரதேச செயலர், வேலணை பிரதேச செயலர், ஊர்காவற்றுறை பிரதேச செயலர், காரைநகர் பிரதேச செயலர், சங்கானை பிரதேச செயலர், சண்டிலிப்பாய் பிரதேச செயலர், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர், மன்னார் நகர பிரதேச செயலர், முசலி பிரதேச செயலர், நானாட்டான் பிரதேச செயலர், கரைதுறைபற்று பிரதேச செயலர் ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அரச காணிகள் மற்றும் காணி சுவீகரிப்பு தொடர்பான விடயங்களில் தீர்வு காணப்பட வேண்டியவை தொடர்பில் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது.

முப்படையினரும் வடக்கில் முன்னெடுக்கும் காணி சுவீகரிப்புக்கு எதிராக மக்களும், மக்கள் பிரதிநிதிகளும் தொடர்ச்சியாக போராடிவரும் நிலையில் வடக்கு ஆளுநர் இத்தகைய கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.11.2022 இல் வெளியிடப்பெற்றது.